செ.வெ.எண்.314 நாள்.28.05.2011

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் மீன்பிடிப்பு தடை செய்யப்பட்ட காலத்தில் வழங்கப்படும் நிவாரண உதவித் தொகையை உயர்த்தி வழங்க ஆணையிட்டார்கள். அதன்படி, மீன்பிடி தடைக் காலத்தில் மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவித் தொகை ரூ.1000/-த்திலிருந்து ரூ.2000/- ஆக உயர்த்தி வழங்க உடனடியாக அரசாணை வெளியிடப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள், கடந்த 24.05.2011 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் இத்திட்டத்தினைத் தொடங்கி வைத்து, 13 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு நிவாரண உதவித் தொகையினை வழங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து இன்று (28.05.2011) சென்னை இராயபுரத்தில் மீனவர்களுக்கு மீன்பிடித் தடைகால நிவாரணம் மற்றும் மீன்பிடி விசைப்படகு ஓட்டுநர் பயிற்சி சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு டி.ஜெயக்குமார் மற்றும் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.ஜெயபால் ஆகியோர் கலந்து கொண்டு 100 மீனவர்களுக்கு மீன்பிடித் தடைகால நிவாரணக் காசோலைகளையும், 100 மீனவர்களுக்கு மீன்பிடி விசைப்படகு ஓட்டுநர் பயிற்சி சான்றிதழ்களையும், காணாமல் போன மீனவர்களின் குடும்பத்தினருக்கு தினப்படியாக நான்கு நபர்களுக்கு ரூ.1,69,000/-மும், விபத்து காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நான்கு நபர்களுக்கு தலா ரூ.50,000/- வீதம் ரூ.2,00,000/-த்திற்கான காசோலைகளையும் வழங்கினார்கள்.

இவ்விழாவில், ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி. வெற்றிவேல், மீன்துறை உதவி இயக்குநர்கள் திரு.என்.சேகர், திரு.கே. சிங்காரவேலன் உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

28/05/2011
மீன்வளத் துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர்
தலைமைச் செயலகம் சென்னை-600 009